**OS.No.28/2024, Dated 24.02.2026**

The witness sworn under Oaths Act 1969 on this the day of 24th day of February 2026.

**வா.சா.1 – பன்னீர்செல்வம் த/பெ சின்னப்ப கவுண்டர் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

01.05.1969 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் அளவுகளில் இருந்து மாறுபட்டு சில அளவுகள் கூடுதலாகவும் குறைவாகவும் 27.08.1987 தேதியிட்ட ஆவணத்தில் எழுதப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. 27.07.1992 தேதியிட்ட கிரைய பத்திரத்தில் சரியான அளவுகள் காட்டி எழுதப்படவில்லை என்றால் அது குறித்தும் எனக்கு சரியாக தெரியவில்லை. சில சர்வே எண்களில் அளவு குறைத்து எழுதப்பட்டது என்றாலும், சரியான அளவுகள் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. விடுப்பட்ட இடங்களுக்கு கிரைய பத்திரம் அல்லது பிழைத்திருத்தம் பத்திரம் எழுதிக்கொள்ளலாம் என்று பிரதிவாதிகள் அழைத்ததற்கு நானும் எனது தகப்பனாரும் ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் அழைத்தோம் அவர்கள் வரவில்லை. சென்னையில் உள்ள மாநில் சட்டப்பணிகள் ஆணைகுழுவில் இருந்து எனக்கு கடிதம் வந்தது என்றால் சரிதான். இதுசம்மந்தமாக பல்வேறு பஞ்சாயத்துகளும் ஊரில் நடந்தது என்றால் சரிதான். அதற்கு நான் கட்டுப்படவில்லை என்றால் பிரதிவாதிகள் தான் கட்டுப்படவில்லை. 1ம் பிரதிவாதி எனது தகப்பனாருக்கு கொடுத்தது 03.12.1993 தேதியிட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த விற்பனை ஆவணத்தில் சில அளவுகள் குறைத்து தான் கொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. அந்த 3 விற்பனை ஆவணங்களிலும் விடுப்பட்ட சொத்துகளை நாங்கள் அனுபவிக்கவில்லை என்றாலும் அவற்றை நாங்கள் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. சர்வே எண்.13பி/5பி2, 9 செண்ட் விஸ்தீரணத்திற்கு பட்டா எண். 439 தற்போதும் பிரதிவாதிகளின் பேரில் தான் உள்ளது என்றால் எனக்கு

தெரியவில்லை. சர்வே எண். 13பி/1ஏ, 1 செண்ட் பழைய பட்டா எண். 236 எனது பெயரிலும் எனது தகப்பனார் பெயரிலும் இல்லை என்றால் எனக்கு தெரியவில்லை. தற்போது வரை மேற்படி சொத்திற்கு அ பதிவேடு வலசை கவுண்டர் பெயரிலும், கம்ச கவுண்டர் பெயரிலும் உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. சர்வே எண்.22/பி2ஏ, 19 செண்ட், பழைய பட்டா எண். 201 அதற்கான அ பதிவேடும் வலலை கவுண்டர் பெயரில் தான் உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. ஆனால் நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.02.24 18:19:38 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி